IDAL/2026-27/SE/102 **November 2, 2026**

National Stock Exchange of India Ltd
BSE Ltd.

Scrip Symbol - INTELLECT
Scrip Code – 538835

Dear Sir/Madam,

Sub: Newspaper publications pertaining to unaudited Financial Results for the quarter and half year ended September 30, 2026

Please find enclosed Newspaper publications pertaining to unaudited Financial Results for the quarter and half year ended September 30, 2026, published on October 31, 2026, in the Newspapers viz. - Business Line (in English) and "Dinamani" (in Tamil) containing a Quick Response code and the details of the webpage where complete financial results of the company is accessible.

Kindly take the above information on record.

Yours truly,
For **Intellect Design Arena Limited**

PRAKASH BHARADWAJ
Digitally signed by PRAKASH BHARADWAJ
Date: 2026.11.02 16:02:51 +05'30'

Prakash Bharadwaj
Company Secretary and Compliance Officer
ACS-37214

ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடத் தடை: மேற்கு வங்கத்தில் வருகிறது புதிய விதிகள்

கொல்கத்தா, அக். 30: அரசுப் பள்ளிகளில் புதிதாக பணியில் சேரும் ஆசிரியர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடை செய்யும் வகையில் புதிய விதிகளை மேற்கு வங்க அரசு விரைவில் உருவாக்க உள்ளது.

இதுதொடர்பாக, மாநில முதல்வர் சுவேந்து அதிகாரி தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக மாநில கல்வி அமைச்சர் தீபக் பர்மன் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: மேற்கு வங்க மாநில பள்ளிப் பணிகள் தேர்வாணைய (எஸ்எஸ்சி) தேர்வுகள் மூலம் புதிதாகத் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் புதிய விதிகளை உருவாக்க மாநில அரசு முடிவு செய்துள்ளது. இந்த நடைமுறை ஏற்கெனவே பல மாநிலங்களில் அமலில் உள்ளது. விரைவில் இந்த விதிகள் உருவாக்கப்படும். ஏற்கெனவே பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு இந்த விதிகள் பொருந்தாது.

மேலும், ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பொறுப்புகூறல் நடைமுறையை அடுத்த கல்வியாண்டுமுதல் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாணவர்களின் கற்றல் திறன் மேம்பாட்டுக்கு ஆசிரியர்கள் பொறுப்பேற்க வேண்டும். அதாவது, ஆசிரியர்களின் செயல்திறன் அடிப்படையில், அவர்களுக்கான ஊதிய உயர்வு, பதவி உயர்வுகள் வழங்கப்படும் என்றார்.

முன்னதாக, அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு முதல்வர் சுவேந்து அதிகாரி கூறுகையில், 'எஸ்எஸ்சி மூலம் பள்ளிகளில் நியமிக்கப்படும் ஆசிரியர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபடுவதை அல்லது தேர்தலில் போட்டியிடுவதைத் தடை செய்யும் வகையில் விதிகளை வகுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கெனவே பள்ளிகளில் பணியில் உள்ள ஆசிரியர்களுக்கும், தேர்தலில் போட்டியிட்டு ஊராட்சி மற்றும் நகராட்சி மன்ற பதவிகளை வகிப்பவர்களுக்கும் இது பொருந்தாது. வேறு எந்த மாநிலத்திலும் ஆசிரியர்கள் அரசியலில் நேரடியாக ஈடுபடுவதில்லை. பிகார், உத்தர பிரதேச மாநிலங்களை உதாரணமாகக் கொண்டு, மேற்கு வங்கத்திலும் இதுபோன்ற விதிகளைக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது' என்றார்.

பொதுத் துறை வங்கிகள் விற்பனைக்கான சொத்துகள் அல்ல

ஐடிபிஐ ஊழியர்களுக்கு ராகுல் கடிதம்

புது தில்லி, அக். 30: பொதுத் துறை வங்கிகள் விற்பனை செய்வதற்கான சொத்துகள் அல்ல; அவை நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான கருவிகள் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

பொதுத் துறை வங்கியான ஐடிபிஐ வங்கியின் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு அண்மையில் ஒப்புதல் அளித்தது. இதன்படி, ஐடிபிஐ வங்கியில் மத்திய அரசின் 30.48 சதவீத பங்குகள், எல்ஐசியின் 30.24 சதவீத பங்குகள் என மொத்தம் 60.72 சதவீத பங்குகளை, கனடாவின் ஃபேர்ஃபேக்ஸ் ஃபைனான்ஷியல் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கு ரூ.52,878 கோடிக்கு விற்பனை செய்ய அமைச்சரவைக் குழு ஒப்புதல் வழங்கியது.

இந்த விவகாரம் தொடர்பாக ஐடிபிஐ வங்கி ஊழியர்களுக்கு ராகுல் காந்தி வியாழக்கிழமை எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஆண்டு மார்ச் மாதம் என்னை ஐடிபிஐ வங்கி ஊழியர்கள் சந்தித்து, லாபகரமாக இயங்கும் வங்கியை மத்திய அரசு ஏன் விற்பனை செய்கிறது என்று கேள்வி எழுப்பினர். இந்தக் கேள்வியை நான் மக்களவையில் எழுப்பினேன். லாபகரமாக இயங்கும் பொதுத் துறை வங்கி ஏன் விற்பனை செய்யப்படுகிறது? அதன் ஊழியர்களும், வைப்புத்தொகைதாரர்களும் எப்படி பாதுகாக்கப்படுவர் என்று கேட்டேன்.

ஆனால், மத்திய அரசு பதிலளிக்கவில்லை. தற்போது ஐடிபிஐ வங்கியை கனடா நாட்டு நிறுவனத்துக்கு விற்பனை செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்னர், ஐடிபிஐ வங்கி நஷ்டத்தை சந்தித்த நிலையில், கடந்த ஆண்டு அந்த வங்கி ரூ.9,000 கோடிக்கும் அதிகமாக லாபம் ஈட்டியது. இந்த லாபத் துக்கு ஐடிபிஐ வங்கி ஊழியர்களின் உழைப்புதான் காரணம். மக்கள் பணத்தில் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனம் மக்களுக்குச் சொந்தமானதாகும்.




கடந்த 2003-ஆம் ஆண்டு குறைந்தபட்சம் ஐடிபிஐ வங்கியின் 51 சதவீத பங்குகள் எப்போதும் அரசின் வசம் இருக்கும் என்று நாடாளுமன்றத்தில் அப்போதைய மத்திய காங்கிரஸ் அரசு வாக்குறுதி அளித்தது. அந்த வாக்குறுதி சட்டமாக்கப்படாவிட்டாலும் நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதி, நாட்டு மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியாகும்.

ஐடிபிஐ வங்கி தனியார்மயமாக்கப்பட்ட பின்னர், அங்கு பட்டியலினத்தவர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பணியில் சேர இடஒதுக்கீடு இருக்காது.

பொதுத் துறை வங்கிகள் விற்பனை செய்வதற்கான சொத்துகள் அல்ல. அவை நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான கருவிகள் என்று தெரிவித்துள்ளார். இந்தக் கடிதத்தை ராகுல் எக்ஸ் தளத்தில் வெளியிட்டார்.

வங்கிகளை சொந்த நிறுவனங்களாக பயன்படுத்திய காங்கிரஸ்: மத்திய நிதியமைச்சர்



ராகுலின் கடிதத்துக்குப் பதிலளித்து மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவு:

மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது வங்கிகளையும், நிதி நிறுவனங்களையும் தனது சொந்த நிறுவனங்களாகப் பயன்படுத்தியது. வங்கிக் கடன் வழங்குவதற்கான விதிமுறைகளைப் பின்பற்றாமல், காங்கிரஸ் விருப்பப்படி வங்கிக் கடன்கள் அளிக்குமாறு வங்கி ஊழியர்களுக்கு அக்கட்சி அழுத்தம் அளித்தது.

1957-ஆம் ஆண்டில்...: கடந்த 1957-இல் காங்கிரஸ் தலைவர்களின் செல்வாக்கால் தொழிலதிபர் ஹரிதாஸ் முந்த்ராவுக்கு எல்ஐசியில் இருந்து பணம் கிடைத்தது.

கடந்த 1976-இல் பாரத ஸ்டேட் வங்கித் தலைவர் பதவியில் இருந்து ஆர்.கே.தல்வாரை அப்போதைய இந்திரா காந்தி அரசு நீக்கியது. இந்திராவின் மகன் சஞ்சய் காந்தியுடன் நெருக்கமாக இருந்தவர்களுக்குத் தொடர்புடைய ஒரு நிறுவனத்துக்கு கடன் அளிப்பதற்கான நிபந்தனைகளைத் தளர்த்த ஆர்.கே.தல்வார் மறுத்ததால், அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாருதி கார் நிறுவனத்துக்குக் கடன் அளிப்பது தொடர்பாக, சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா வங்கிக்கு சஞ்சய் காந்தி அழுத்தம் அளித்தார்.

முன்னாள் பிரதமர்கள் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தியின் கீழ் மத்திய நிதித்துறை இணையமைச்சராகப் பணியாற்றிய ஜனார்த்தன் பூஜாரி, கடந்த 1980-ஆம் ஆண்டுகளில் கடன் அளிக்க வங்கி ஊழியர்களுக்கு அழுத்தம் அளித்தார்.

தனது குடும்பம் சம்பந்தமான தொழிலுக்கு கடன் அளிக்குமாறு, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் அமைச்சராக இருந்த பவண் குமார் பன்சல், கனரா வங்கிக்கு அழுத்தம் அளித்தார்.

மத்தியில் பாஜக ஆட்சிக்கு வந்தபோது ஐடிபிஐ வங்கி மோசமான நிலையில் இருந்தது. அந்த வங்கியை பிரதமர் மோடி அரசு மீண்டும் வளர்ச்சி பாதைக்குக் கொண்டு வந்தது. தற்போது அந்த வங்கி அடுத்தகட்ட வளர்ச்சிக்குத் தயாராக உள்ளது.

அந்த வங்கியை மறுசீரமைக்கும் திட்டத்தில் அனைத்து நடைமுறைகளும் உரிய முறையில் பின்பற்றப்பட்டு, அதுகுறித்து ஏற்கெனவே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்று பதிவிட்டார்.

வங்கி சீர்திருத்தங்களுக்கான உயர் நிலைக் குழு அமைப்பு

புது தில்லி, அக்.30: வங்கி சீர்திருத்தங்களுக்கான உயர் நிலைக் குழுவை மத்திய அரசு வெள்ளிக்கிழமை அமைத்தது.

2026-27 மத்திய பட்ஜெட்டில் வெளியான அறிவிப்பைத் தொடர்ந்து தற்போது இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'வளர்ச்சியடைந்த பாரதத்துக்கான வங்கி உயர் நிலைக் குழு என்ற பெயரிலான வங்கி சீர்திருத்தக் குழுவின் தலைவராக முன்னாள் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத் தலைவர் சுரேஷ் என்.படேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் சிரீஷ் சந்திர முர்மு, ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் என்.எஸ்.விஸ்வநாதன், இந்திய வங்கியின் முன்னாள் நிர்வாக இயக்குநர் பத்மஜா சுந்துரு ஆகிய உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவின் பதவிக்காலம் 6 மாதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வங்கி நடைமுறைகளை மதிப்பீடு செய்வது, சர்வதேச அளவிலான சிறந்த நடைமுறைகளை கண்டறிந்து அவற்றை இந்திய வங்கி அமைப்புக்கு ஏற்ப செயல்படுத்துவது, உலகளவில் இந்திய வங்கிகளின் தரத்தை உயர்த்துவது, வளர்ச்சியடைந்த பாரத இலக்கை அடையும் வகையில் எளிய வணிக முறைகள் மற்றும் ஊரக, கூட்டுறவு வங்கிகள் உள்பட வங்கிகளில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்களை இந்தக் குழு பரிந்துரைக்கவுள்ளது.

இதுதவிர மேம்பாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கியல்லாத நிறுவனங்கள் உள்பட வங்கிகளுக்கான நீண்ட கால முதலீட்டுத் தேவைகளை மதிப்பீடு செய்து, நிதி ஆதாரங்கள் மற்றும் கடன் வளர்ச்சி விகிதத்தை உயர்துவதற்கான வழிகளையும் கூறவுள்ளது. வங்கித் துறையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் எண்ம புத்தாக்கத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளையும் இந்தக் குழு வழங்கவுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தற்காலிக உறுப்பினர் பதவிக்கு இந்தியா போட்டி

நியூயார்க், அக். 30: ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் 2028-29ஆம் ஆண்டுக்கான தற்காலிக உறுப்பினர் பதவிக்கு போட்டியிட இருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.



ஹரீஷ் பர்வதனேனி

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய 5 நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாகவும், 10 நாடுகள் தற்காலிக உறுப்பினர்களாகவும் உள்ளன.

இதில் 10 தற்காலிக உறுப்பினர்கள் பதவிக்கு, நாடுகள் சுழற்சி அடிப்படையில் தேர்தல் மூலம் தேர்வு செய்யப்படும். அதன்படி, 2028-29ஆம் ஆண்டுக்கான தற்காலிக உறுப்பினராக ஆசியா- பசிபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் இருந்து ஒரு நாடு தேர்வு செய்யப்படவுள்ளது. இந்த ஓரிடத்துக்கு இந்தியா, தஜிகிஸ்தான் ஆகிய 2 நாடுகள் போட்டியிடவுள்ளன.

இது குறித்து அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்ற தொழில்நுட்பம் மற்றும் கடல்சார் பாதுகாப்பு தொடர்பான விவாத நிகழ்ச்சியில் ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ஹரீஷ் பர்வதனேனி பேசியதாவது:

2028-29ஆம் ஆண்டுக்கான ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தற்காலிக உறுப்பினர் பதவிக்கு இந்தியா போட்டியிடுகிறது. அப்போது கடல்சார் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றுக்கு இந்தியா முன்னுரிமை கொடுக்கும்.

தொழில்நுட்பமானது, கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்வதாக இருக்க வேண்டும். மோதலை உண்டாக்கும் வகையில் இருக்கக் கூடாது. பெருங்கடல்கள் உலகின் உயிர் நாடியாக உள்ளன. அவை பொருளாதாரங்களை இணைக்கின்றன. வாழ்வாதாரங்களை நிலைநிறுத்துகின்றன.

கடல்சார் பகுதிகளைப் பாதுகாப்பானதாக மாற்ற வேண்டுமே தவிர, அவற்றை மோதல் நிறைந்த பகுதிகளாக்கக் கூடாது. இந்த நோக்கத்துக்காக அனைத்து நாடுகளுடனும் இந்தியா இணைந்து செயல்பட தயாராக உள்ளது என்றார் அவர்.

சவூதி விமான சேவை ரத்து நவ.14 வரை நீட்டிப்பு: ஏர் இந்தியா, ஏஐ எக்ஸ்பிரஸ் நிறுவனங்கள் அறிவிப்பு

புதுதில்லி, அக். 30: சவூதி அரேபிய நகரங்களுக்கு தங்களது விமான சேவை ரத்து செய்யப்பட்டிருப்பதை வரும் நவம்பர் 14-ஆம் தேதி வரை நீட்டிப்பதாக ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

கடந்த வாரம் இந்த இரு நிறுவனங்களும் சவூதி அரேபியாவின் ரியாத் மற்றும் தம்மாம் நகரங்களுக்கான விமான சேவையை நவம்பர் 7 வரையிலும், ஜெட்டா நகருக்கான விமான சேவையை அக்டோபர் 31 வரையிலும் ரத்து செய்திருந்தன.

இண்டிகோ மற்றும் ஆகாசா ஏர் ஆகிய விமான சேவை நிறுவனங்களும் சவூதி அரேபியாவுக்கு விமானங்களை ரத்து செய்துள்ளன. அண்மைக்காலமாக மேற்கு ஆசியாவில் புவிசார் அரசியல் பதற்றங்கள் அதிகரித்துள்ளன. இதனால் சவூதி அரேபியாவில் உள்ள விமான நிலையங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.

இந்நிலையில், ஏர் இந்தியா நிறுவனம் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் 'சவூதி அரேபியாவில் நிலவி வரும் சூழலைக் கருத்தில் கொண்டு இந்தியாவில் இருந்து ஜெட்டா, ரியாத் மற்றும் தம்மாம் நகரங்களுக்கு சென்றுவரக்கூடிய ஏர் இந்தியா, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானங்களின் சேவை நவம்பர் 14-ஆம் தேதி வரை ரத்து செய்யப்படுகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானங்களில் பயணிக்க வரும் நவம்பர் 14-ஆம் தேதி வரை முன்பதிவு செய்துள்ள பயணிகள் நவம்பர் 29-ஆம் தேதி வரை மறு முன்பதிவை மேற்கொள்ள வசதி அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தவிர, தேவைப்பட்டால் ரத்து செய்யப்பட்டுள்ள விமான சேவைகளுக்கான கட்டணத்தை அவர்கள் முழுமையாகத் திரும்பப் பெறவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இண்டிகோ நிறுவனம் ஜெட்டா, தம்மாம், மதீனா ஆகிய நகரங்களுக்கான விமான சேவையை வரும் 14-ஆம் தேதி வரையும், ஆகாசா ஏர் நிறுவனம் ரியாத் நகருக்கான விமான சேவையை நவம்பர் 30 வரையும் ஜெட்டாவுக்கான விமான சேவையை நவம்பர் 10-ஆம் தேதி வரையும் ரத்து செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பாங்க் ஆஃப் பரோடா बैंक ऑफ़ बड़ौदा **Bank of Baroda**

மீனம்பாக்கம் கிளை
எண்.19, GST ரோடு, கஸ்டம்ஸ் ஆபிஸ் எதிர்ல், மீனம்பாக்கம், சென்னை—600 027
மொபைல்: 97102 17530

சுவாதீன அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ள பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் 2002ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் மேற்சொன்ன சட்டத்தின் 13 (12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும் 2002ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 3க்கு ஏற்பவும், கடன்தாரர்கள் திருமதி வர்ஷா M. திரு பழனி முருகேசன் மற்றும் திருமதி வாணி முருகேசன் ஆகியோர் 06.08.2026 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ. 98,69,298.18 (ரூபாய் தொன்னூற்று எட்டு லட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து இருநூற்றுத் தொன்னூற்று எட்டு மற்றும் காசுகள் பதினெட்டு மட்டும்) மேலும் செலுத்தப்படும் நாள் வரையிலான வட்டி, மேலதிக வட்டி, நிலுவையில் உள்ள வட்டி, இதர கட்டணங்கள், ஆகியவற்றை 60 நாட்களுக்குள் சேர்த்து செலுத்தக்கோரி 06.08.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பின் மூலமும் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்தத் தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(4)ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், விதிமுறைகளின் விதி 8க்கு இணங்கவும், 27.10.2026 அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி அசையா சொத்தினை சுவாதீனம் எடுத்துள்ளார்.

இந்த அறிவிப்பின் மூலம் குறிப்பாக கடன்தாரர் / ஜாமீன்தாரர்/ அடமானதாரர் பொதுவாக பொது மக்களுக்கு எச்சரிக்கப்படுவது என்னவென்றால், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்துக்கள் பாங்க் ஆஃப் பரோடா வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையான ரூ. 98,69,298.18 (ரூபாய் தொன்னூற்று எட்டு லட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து இருநூற்றுத் தொன்னூற்று எட்டு மற்றும் காசுகள் பதினெட்டு மட்டும்) கணக்கிடப்பட்ட வட்டி, மேலும் எதிர்கால வட்டி, மேலதிக வட்டி மற்றும் இதர கட்டணங்களுக்கு பிணையாக உள்ளது என்பதால் யாரும் கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மீது எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

SARFAESI சட்டத்தின் 13(8) விதிகளின்படி பாதுகாப்பு மற்றும் அதன் விதிகளுக்காகவும் தங்கள் கவனத்திற்காகவும் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அசையா சொத்து விவரம்

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, வரதராஜபுரம் கிராமம், எண்: 82, சர்வே எண் 96/1, பட்டா எண். 9650, பட்டாப்படி சர்வே எண் 96/21-ன் மனை எண். 231ன் அளவு 2440 சதுர அடி காலி மனை அதன் துண்டுகளும் பகுதிகளும். **அதன் எல்லைகள்: வடக்கு:** சர்வே எண் 104, **தெற்கு:** 30 அடி அகல சாலை, **கிழக்கு:** மனை எண் 232, **மேற்கு:** மனை எண் 230. **அளவுகளில்:** வடக்கில் 40 அடி, தெற்கில் 40 அடி, கிழக்கில் 61 அடி, மேற்கில் 61 அடி. இச்சொத்து தென்சென்னை பதிவு மாவட்டம், படப்பை சார்-பதிவு மாவட்டத்தில் உள்ளது.

இடம் : சென்னை
தேதி : 27.10.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாங்க் ஆஃப் பரோடா

கடன் வசூல் தீர்ப்பாயம்-III
சென்னை முன்னிலையில்
6-வது தளம், அடிஷனல் ஆபிஸ் பிள்டிங், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, சென்னை-600 006.

O.A.No.362 of 2026

தி ஃபெடரல் வங்கி லிமிடெட்,
அடையாறு கிளை, எண்.10B, ராமச்சந்திர ஆதித்தனார் சாலை, 4-வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை - 600 020
...மனுதாரர் வங்கி

-எதிர்-

1. **Mrs.பிரியதர்ஷினி ராஜன் மேனன்** W/o.செருகோட் ராஜன் மேனன் எண்.57, பாலாஜி நகர், 1வது தளம், ப்ளாக் எண்.1, லெய்செஸ்டர் ஸ்கொயர், பாடிக்குப்பம் சாலை, அண்ணா நகர், சென்னை - 600 040.
2. **Mr.செருகோட் ராஜன் மேனன்** S/o.Mr.கிருஷ்ணன் குட்டி எண்.57, பாலாஜி நகர், 1வது தளம், பிளாக் எண்.1, லெய்செஸ்டர் ஸ்கொயர், பாடிக்குப்பம் சாலை, அண்ணாநகர், சென்னை - 600 040. **கூடுதல் முகவரி:** ப்ளாட் எண்.803 Q ப்ளாக், மெட்ரோ சோன், 44, பிள்ளையார் கோவில் தெரு, அண்ணா நகர், சென்னை, தமிழ்நாடு - 600 040
3. **ஓசோன் ப்ராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்** (CIN: U70101TN2005PTC056894), புதிய எண். 53, G.N.செட்டி சாலை, திநகர், சென்னை - 600017

...பிரதிவாதிகள்

மாற்றுச் சேவை மூலம் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை

மேற்படி பெயருடைய விண்ணப்பதாரர் பிரதிவாதிகளிடமிருந்து **10.12.2025** அன்றுள்ளபடி ₹ **2,08,87,838/-** (ரூபாய் இரண்டு கோடியே எட்டு லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து எண்ணூற்று முப்பத்து எட்டு மட்டும்) வசூலிப்பதற்காக விண்ணப்பம் ஒன்றினை இந்த தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்துள்ளார்.

ஆனால் மேற்கண்ட 1-ல் இருந்து 3 வரை உள்ள பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை திரும்ப பெறப்பட்டது. அதன் காரணமாக அந்த அழைப்பாணையை மாற்று முறையில் வழங்க இந்த மாண்புமிகு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. எனவே இந்த அறிவிப்பு செய்தித்தாளில் வெளியிடப்படுகிறது.

இந்த மாண்புமிகு தீர்ப்பாயத்தில் **08.12.2026 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ காலை 11.00 மணிக்கு** நேரடியாகவோ அல்லது முறையான அங்கீகாரத்தோடு வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி பதில் தெரிவித்து விண்ணப்பதாரர் வங்கியால் விண்ணப்பத்தில் கோரப்பட்ட நிவாரணத்தினை ஏன் வழங்கக்கூடாது என்பதற்கான தங்கள் தரப்பு காரண விளக்கத்தை எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்யுமாறு கோரப்படுகிறது.

தவறினால் வங்கியால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பமானது சட்டப்படியான முறையில் விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

மாண்புமிகு தீர்ப்பாயத்தின் முத்திரையுடன் **28.10.2026** தேதியில் எனது கைப்பட வழங்கப்பட்டது.

Sd/- பதிவாளர்
கடன் வசூல் தீர்ப்பாயம் - III, சென்னை

बैंक ऑफ़ इंडिया **பேங்க் ஆஃப் இந்தியா** Relationships beyond banking

சென்னை மெயின் கிளை
'ஸ்டார் ஹவுஸ்' முதல் தளம், எண்.30, எர்ரபாலு தெரு, சென்னை 600 001. போன்: 66777555 முதல் 61 வரை. மின்னஞ்சல்: Chennai.Chennai@bankofindia.bank.in

கோரிக்கை அறிவிப்பு 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்க சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு.

வங்கியானது **05.10.2026** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை 13(2) பிரிவின் கீழ் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு வழங்கியுள்ளது. கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பைத் தவிர்ப்பதால், SARFAESI சட்டத்தின் கீழ் இணங்க இதன் மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி: 1) **M/s.Kandhan Minerals**, பிரதிநிதியாக அதன் உரிமையாளர்: **(கடன்தாரர்) திரு.S.சுரேஷ்பாபு, த/பெ. லேட். P. கந்தசாமி, முகவரி 1:** எண்.47, 2வது தெரு, சுமித்ரா நகர், பூவிருந்தவல்லி, சென்னை-600056. **முகவரி 2:** எண்.39, 2வது பிரதான சாலை, திருமால் நகர், பூவிருந்தவல்லி, சென்னை-600056. **முகவரி 3:** எண்.1/3, முதல் தெரு, ருக்குமணி நகர், பூவிருந்தவல்லி, சென்னை-600056 **(2) (ஜாமீன்தாரர்) திருமதி.K.சிவகாமி, க/பெ.T.M.குமரவேல், எண்.69/A,T2,** வசந்தா அப்பார்ட்மென்ட்ஸ், தாமஸ் நகர், சின்ன மலை, சைதாப்பேட்டை, சென்னை-600015. **(3) (ஜாமீன்தாரர்) திரு.K.சரவணகுமார், த/பெ. லேட். P. கந்தசாமி, முகவரி 1:** எண்.13, பிள்ளையார் கோவில் தெரு, பூவிருந்தவல்லி, சென்னை-600056. **முகவரி 2:** S2, எண்.47, 2வது தெரு, சுமித்ரா நகர், பூவிருந்தவல்லி, சென்னை-600056.

கடன் வசதி	அனுமதிக்கப்பட்ட வரம்பு	கடன் நிலுவைத் தொகை	01.07.2013 முதல் 04.10.2026 வரை ஆண்டிற்கு @15.70% வசூலிக்கப்படாத மாதாந்திர வட்டி	அறிவிப்பு தேதியில் உள்ள மொத்த கடன் நிலுவைத் தொகை	NPA தேதி
Export Packing Credit 800082610000016	ரூ.45,00,000/-	ரூ.25,88,893/-	ரூ.53,85,545/-	ரூ.79,74,438 + 05.10.2026 அன்று முதல் @ 15.70% வட்டி	30.06.2013
Current Account 800020110000081	Nil	ரூ.8,71,790.37/-		ரூ.8,71,790.37/-	

அட்டவணை சொத்து : அட்டவணை - A: தற்போது திருவள்ளூர் மாவட்டம் முன்னர் தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பூவிருந்தவல்லி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம் மற்றும் கிராமத்தின் சர்வே எண் 467/1 இல் அடங்கிய சுமித்ரா நகர், மனை எண்.47 இன் பரப்பளவு 2400சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, **எல்லைகள்:** வடக்கில்- மனை எண்.46, தெற்கில்- மனை எண்.48, கிழக்கில்- 30அடி சாலை, மேற்கில்- மனை எண்.88.

அட்டவணை-B அட்டவணை "A" சொத்தில் அமைந்துள்ள தரைத்தளம் மற்றும் இரண்டு மேல்தளங்களில் 6,080 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடங்கள் மற்றும் வளாகங்கள் அனைத்தும், இதில் மொத்தம் 5 குடியிருப்பு அடுக்குமாடி வீடுகள் உள்ளன. அவற்றில் ஒன்று தரைத்தளத்திலும், முதல் மற்றும் இரண்டாம் தளங்களில் தலா இரண்டு வீடுகளும் அமைந்துள்ளன, ஒவ்வொரு குடியிருப்பு வீடும் சுமார் 1,125 சதுர அடி பரப்பளவு கொண்டதாகும். மேலும், மேல்தளம், பொதுப் படிக்கட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கழிவுநீர்த் தொட்டி, ஆழ்துளைக் கிணறு, முன்புற நுழைவுத் தாழ்வாரம் (கார் நிறுத்துமிடம்), சுற்றுச்சுவர், மின் இணைப்புகள் மற்றும் கட்டிடத்தின் பயன்பாட்டிற்கும் அனுபவிப்பிற்கும் பயனளிக்கும் இதர பொருத்துதல்கள் மற்றும் நிறுவுதல்கள் உள்ளிட்ட பொதுவான வசதிகள் அனைத்தும் அடங்கும்.

அட்டவணை-C திரு.K. சரவணகுமார் அவர்களின் பெயரில் உள்ள சொத்து:- அட்டவணை "A" சொத்தில் பத்திரத்தின்படி பிரிக்கப்படாத 1/5 பங்கு, அட்டவணை "B" சொத்தில் பொதுப்பரப்பு உட்பட மற்றும் இரண்டாம் தளத்தில் கிழக்குப்புறத்தில் உள்ள மேற்கு முகமாக உள்ள குடியிருப்பு ஃப்ளாட் S-1 இன் பரப்பளவு 1148 சதுர அடி கட்டிடம்.

திரு.K. சிவகாமி அவர்களின் பெயரில் உள்ள சொத்து:- அட்டவணை "A" சொத்தில் பத்திரத்தின்படி பிரிக்கப்படாத 1/5 பங்கு, அட்டவணை "B" சொத்தில் பொதுப்பரப்பு உட்பட மற்றும் இரண்டாம் தளத்தில் கிழக்குப்புறத்தில் உள்ள மேற்கு முகமாக உள்ள குடியிருப்பு ஃப்ளாட் S-2 இன் பரப்பளவு 1148 சதுர அடி கட்டிடம்.

எனவே, கடன்தாரர்களுக்கு, இந்த அறிவிப்பை வெளியிடப்பட்ட **60 நாட்களுக்குள்**, கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கும், மேலே குறிப்பிட்டுள்ள மொத்தத் தொகையைச் செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட தேதியின்படி கடன் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்கால வட்டி மற்றும் செலுத்தும் தேதி வரை செலுத்தப்பட வேண்டிய பிற தொகைகளுடன் சேர்த்து மொத்தத் தொகையும் செலுத்தப்படாவிட்டால், மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளின் மீதான கடனீட்டு சொத்துக்கள் அமல்படுத்துவதற்கு பேங்க் ஆஃப் இந்தியா தகுந்த நடவடிக்கை எடுக்கக் கட்டுப்படுத்தப்படும் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் கீழ் கூறப்பட்ட நிதிகளுக்கு கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு எதிராக பேங்க் ஆஃப் இந்தியா வங்கிக்குக் கிடைக்கும் உரிமைகள் மற்றும் தீர்வுகளுக்கு பாரபட்சமின்றி இந்தப் பிரகாசம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளவும், பிரிவு 13(13)ன் படி மேலே கூறப்பட்ட பாதுகாப்பை அப்புறப்படுத்துவது அல்லது கையாள்வது அல்லது பாதுகாக்கப்பட்ட கடனாளியின் முன் அனுமதியின்றி பாதுகாக்கப்பட்ட சொத்தை விற்பனை, குத்தகை பரிசு, பணி அல்லது வேறு எந்த இடத்திலும் நீங்கள் பரிமாற்றம் செய்வது ஆகியவற்றிலிருந்து நீங்கள் தடுக்கப்பட்டுள்ளீர்கள்/ தடைசெய்யப்பட்டுள்ளீர்கள்.

தேதி : 05.10.2026; இடம் : சென்னை அதிகாரபூர்வ அதிகாரி, பேங்க் ஆஃப் இந்தியா

ஞாயிற்றுக்கிழமைதோறும் **தினமணி கதிர்** இளமை! புதுமை! இனிமை!

ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
அடையார் கிளை: எண்.55, IV மெயின் ரோடு, காந்தி நகர், சென்னை-600020

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள். 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவின் விதி 9-ன்படி **15.07.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன் கணக்கு எண். 1161870004759-ன் கீழ் கடன் தொகையான ₹ 15,48,476/-** மற்றும் **13.07.2026** முதல் அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் **அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று சக-கடன்தாரர் மற்றும் கடன்தாரர் காலமான Mr.S.ஃப்ரெடி-ன் சட்டப்படியான வாரிசுதாரர்: Mrs.F.லில்லி,** W/o.Mr.S.ஃப்ரெடி, எண்.4, காந்தி தெரு, அரும்பாக்கம், சென்னை-600106 **கூடுதல் முகவரி,** மனை எண்.54, ப்ளாட் எண்.S4, 2வது தளம், கோல்டன் அவென்யூ அனெக்ஸ், பொன்மார் கிராமம், சென்னை-600048 **கடன்தாரர் காலமான Mr.S.ஃப்ரெடி-ன் சட்டப்படியான வாரிசுதாரர்: Mr.F.பிலிப் குமார்,** S/o.Mr.ஃப்ரெடி, **கடன்தாரர் காலமான Mr.S.ஃப்ரெடி-ன் சட்டப்படியான வாரிசுதாரர்: Mr.F.ஜெபெஸ் பால்,** S/o.Mr.ஃப்ரெடி, **கடன்தாரர் காலமான Mr.S.ஃப்ரெடி-ன் சட்டப்படியான வாரிசுதாரர்: Mrs.F.பியூட்டி ஏஞ்சலின்,** D/o.Mr.ஃப்ரெடி, **அனைவரது முகவரி:** மனை எண்.54, ப்ளாட் எண்.S-4, 2-வது தளம், கோல்டன் அவென்யூ அனெக்ஸ், பொன்மார் கிராமம், சென்னை-600 048 **ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன்பெற்றவர், சக-கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத்தவறியதால், குறிப்பாக கடன் பெற்ற நபருக்கும், சக-கடன்தாருக்கும், ஜாமீன்தாருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதென்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 9வது விதியின் படியும் **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 26.10.2026 அன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன்பெற்றவரோ, சக-கடன்தாரரோ, ஜாமீன்தாரரோ மற்றும் பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், அடையார் கிளைக்கு வந்து சேரவேண்டிய கடன் கணக்கு எண்.1161870004759-ன் கீழ் கடன் பாக்கித் தொகையான ₹ 16,16,479/- மற்றும் 24.10.2026 முதல் அதற்கான வட்டி, இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

SARFAESI சட்டம் பிரிவு 13(8)ன் படி கடன் கொடுத்த வங்கியிடம் கடன்பாக்கி வட்டி, இதர செலவுகள், கட்டணங்கள், கம்பெனி செலவிட்ட தொகைகள் ஆகியவற்றை சேர்த்து கடனுக்கு ஈடான சொத்தின் விற்பனைக்கு அல்லது உரிமை மாற்றித்தர நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் செலுத்திவிட்டால் அந்த சொத்து விற்பனை செய்யப்படமாட்டாது அல்லது உரிமை மாற்றித்தரப் படமாட்டாது என்றும் உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

அசையா சொத்து விவரம்

தென்சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, **காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, பொன்மார் கிராமத்தில்** சர்வே எண்கள்.309/1B, 309/2A, 310/1B2 மற்றும் 310/1B3, **"லைவ்" என்றழைக்கப்படும் அபார்ட்மென்ட், ப்ளாட் எண்.S4, இரண்டாம் தளம், மனை எண்.54, கோல்டன் அவென்யூ அனெக்ஸ் (D.T.C.P. மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்ட லேஅவுட்டின் ஒப்புதல் எண்.52/2008), பொன்மார், சென்னை-600 048** என்னும் முகவரியில் உள்ள **ப்ளாட்டின் பரப்பு 990 சதுர அடி** மற்றும் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 60 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 60 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 80 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 80 அடி **ஆக மொத்தம் 4800 சதுர அடி நிலம், இதில் 577.54 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: 30 அடி ரோடு, தெற்கு: மனை எண்.43, கிழக்கு: மனை எண்.53, மேற்கு: மனை எண்.55

தேதி: 26.10.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

வரி விளம்பரம்

PUBLIC NOTICE

CHANGE OF NAME & DATE OF BIRTH

CHANGE OF NAME & D.O.B
I, Army Personnel No.JC-224854H, Rank: EX SUB MAJ
Name: **C JOSHUA SANTHAKUMAR**
residing at No.24/1, Vasantha Garden 2nd Lane, Ayyanavaram, Chennai, Tamilnadu-600023
have changed my Wife's Name and date of birth from
D JACQULINE PUNITHAVATHI & 18 JAN 1964
to **J JACQUILINE PUNITHAVATHY & 18 MAY 1963**
vide affidavit dated 29.10.2026 before Advocate and Notary Public, Vellore Court, Vellore District, Tamilnadu.

CHANGE OF NAME

NAME CHANGE
I G. SENTHIL KUMAR
S/o : R S Gandhi Nadar,
Age : 48
Residing Address :
No.26A/27, Gandhi Salai, Velachery
CHENNAI - 600 042.
Shall henceforth be known as
G. SENDHIL KUMAR

intellect live your dream

இன்டெலக்ட் டிசைன் அரீனா லிமிடெட்
(CIN: L72900TN2011PLC080183)
பதிவு அலுவலகம்: எண்: 244 அண்ணா சாலை, சென்னை—600 006, தமிழ்நாடு, இந்தியா
நிர்வாக அலுவலகம்: பிளாட் எண்.3/G-3, சிப்காட் IT பார்க், சிறுசேரி, சென்னை—600 130.
மின்னஞ்சல்: shareholder.query@intellectdesign.com, company.secretary@intellectdesign.com
இணையதளம்: www.intellectdesign.com போன்: 044-6700 8000 ஃபாக்ஸ்: 044-6700 8874

30, செப்டம்பர் 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்க்கான, தணிக்கை செய்யப்படாத, தனித்தன்மையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிசார் முடிவுகளின் அறிக்கை

தணிக்கைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், INTELLECT DESIGN ARENA LIMITED ("நிறுவனம்") இயக்குநர்கள் குழு, **அக்டோபர் 30, 2026** அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில், **செப்டம்பர் 30, 2026** உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்க்கான, தணிக்கை செய்யப்படாத, தனித்தன்மையான மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகளை அங்கீகரித்துள்ளது. இவை SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 இன் விதிமுறை 33 இன் அடிப்படையில், நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களான M/s. MSKC & Associates LLP, (Formerly known as MSKC & Associates), ஆல் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

மேற்கூறிய முடிவுகள் நிறுவனத்தின் வலைத்தளமான **https://www.intellectdesign.com/investor/results/Financials-Q2FY27.pdf** இல் வெளியிடப்படுள்ளது. மேலும், கீழே வழங்கப்பட்டுள்ள விரைவு மறுமொழி குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலமும் பெறலாம்.

SCAN ME

இடம் : சென்னை
தேதி : அக்டோபர் 30, 2026

இன்டெலக்ட் டிசைன் அரீனா லிமிடெட்க்காக
கையொப்பம்
அருண் ஜெயின்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
DIN : 00580919


VISUALLY.

Compiled by **Sourashis Banerjee** | Graphic: **Visveswaran V**

Knesset knot

The October 2026 Israel's parliamentary election saw Benjamin Netanyahu's coalition lose its majority in the first election since the October 7, 2023 attacks, signaling a massive public referendum against his leadership. Neither Netanyahu's bloc nor Gadi Eisenkot's opposition holds the 61 seats needed to govern, risking a coalition paralysis or another election, which is not new in Israel's history especially in the recent past. High turnout made non-aligned Palestinian-Israeli parties potential kingmakers, with 19 seats in their kitty. Any new leadership under Eisenkot could potentially loosen Israel-US diplomatic coordination over Iran

Israel has never had a single party government





Benjamin Netanyahu is the longest serving PM at 19 years (1st:- 1996-99, 2nd:- 2009-21 & 3rd:- 2022-26)



Gadi Eisenkot, former Chief of Staff of IDF, emerged as principal opposition as leader of Yashar, the new centrist political party



Arab-Palestinians in Israel parties, in their strongest showing ever, received 19 seats. Their previous best: 5 seats in 2022.



Israel's parliament —Total seats: **120** | Majority: **61**


Eisenkot bloc's promises
- National security
- Government accountability
- Economic reform
- Democratic values

Israel under Netanyahu

Macro indicators of last 20 years


Real GDP grew by only 4 per cent in 2025

Real GDP by expenditure (y-o-y growth in %)




Per capita GDP rebounded in 2025

Real GDP per capita (in $)




Inflation has remained within limits

CPI inflation (in %)



FDI outflows accelerated following the war

FDI (in $ million)



Source: Knesset Government of Israel, Bloomberg

Shaded area represents Netanyahu's years

Binance hit by security breach, assets worth $6.3 billion impacted

DIGITAL THEFT. Crypto exchange temporarily suspends deposits, withdrawals; freezes half the impacted assets

Vallari Sanzgiri/Agencies
Mumbai

Binance, the world's largest crypto exchange, flagged a security incident in the early hours of Friday, with a total impact worth $6.3 billion. While the exchange has promised to cover all losses and taken temporary measures, Bitcoin crashed below $79,000.

An initial investigation by the exchange suggests that the security incident started with the attacker gaining access to a service container via a compromised DevOps engineer's laptop to submit unauthorised withdrawal transactions.

The bulk of the heist unfolded in around 20 minutes beginning late on Thursday and bore similarities to previous large attacks blamed on North Korea, according to US blockchain analysis firms TRM Labs and Chainalysis.

TRM said the attackers were able to order wallets that Binance uses to empty into hacker-controlled wallets, mirroring a 2025 heist at crypto exchange Bybit, which the US Federal Bureau of Investigation had attributed to Pyongyang.



Binance also promised to cover all losses from the SAFU fund

As an immediate precaution, Binance also temporarily suspended deposits and withdrawals amidst security checks, revoked the affected address authorisation and notified law enforcement and blockchain intelligence partners to trace and recover funds.

"We have found no evidence of any wallet private key leak. We will share a detailed technical post-mortem once the investigation is complete and the facts are fully verified," said the exchange in its statement on social media platform X. The company also stated that it had frozen around $3 billion on-chain assets with the help of blockchain partners.

The crypto exchange also promised to cover all losses from the SAFU fund and the company's funds and publish an updated Proof of Reserves once the remediation is complete.

Shortly after the incident, Indian crypto exchange CoinDCX temporarily moved its futures trading to reduce-only on a precautionary basis. Shortly after, it confirmed futures trading to be fully operational across all markets barring 4 tokens that remain in Reduce-Only mode: Sophon (SOPH), Era Token (ERA), Gitcoin (GTC), Latoken (LATO). This is for INR and USDT pairs.

"Following recent developments involving our global liquidity provider, our risk team continues to monitor these 4 tokens for potential market manipulation and unusual volatility," said CoinDCX.

The latest attack comes after a churn in the ecosystem with other security attacks being flagged over the week. Commenting on the latest, Sharat Chandra, Founder, EmpowerEdge Ventures, said, "We are only witnessing the beginning of a new threat landscape, where rogue elements will increasingly weaponise frontier technologies, including AI, to exploit vulnerabilities. Banks, NBFCs, fintechs and Web3 players have all been at the receiving end of these attacks."

Bitcoin drops below $77,000

Bloomberg

Bitcoin sank below $77,000 for the first time in more than a month, deepening a selloff after Binance Holdings revealed a record hack that rattled the crypto industry and renewed questions about the security of customer assets.

The original cryptocurrency declined as much as 3.1 per cent on Friday to fall as low as $76,300.

Binance's BNB token has declined about 5 per cent over the past 24 hours to around $700.

LEANING BEARISH

"The broader crypto market was already leaning bearish, which is why the selloff spread so quickly across the board," said Jeff Ko, Chief Analyst at ViaBTC.

Bitcoin and other tokens were already under pressure this week with broader macro forces weighing on the market.

Futures contracts for the tech-heavy Nasdaq 100 were down 2.4 per cent ahead of the open following disappointing earnings reports from the likes of Amazon.com Inc and Intel Corp.

Bitcoin had hovered around $80,000 for much of the week.

However, a Friday expiry of $11 billion worth of options on the platform Deribit loomed over the market, adding to the broader risk-off mood.

About $1.3 billion worth of bullish positions on cryptocurrencies were wiped out in a 24-hour period, according to Coinglass data.

Extreme poverty falls to 2.6%, but top 10% earn 13x more: World Bank report

Shishir Sinha
New Delhi

KEY FINDINGS
- Between 2011 and 2023, the share of the population living below the lower middle-income country line ($4.20/day) fell to 16.1% from 57.7%
- Extreme poverty ($3/day) declined from 27.1% to 2.6%

The World Bank has said that extreme poverty in India has dipped by 2.6 per cent. However, it noted that wage disparity remains high, with the top 10 per cent earning around 13 times more than the bottom 10 per cent.

"Over the past decade, India has made remarkable progress in reducing poverty across both monetary and non-monetary dimensions, recording one of the fastest poverty declines in the world," the World Bank said in its October 2026 Poverty & Equity Brief.

Between 2011 and 2023, the share of the population living below the lower middle-income country line ($4.20/day) fell to 16.1 per cent from 57.7 per cent, lifting an estimated 49.6 crore people out of poverty, while extreme poverty ($3.00/day) declined from 27.1 per cent to 2.6 per cent. Finance Minister Nirmala Sitharaman attributed this to the government's sustained policy efforts. "We remain committed to building on this progress through productive employment, stronger household incomes and effective delivery of public services, so that the aspirations of our people are met," she said.

Meanwhile, the World Bank said poverty is projected to continue declining, albeit more gradually, with the poverty rate at the $4.20/day line expected to fall from 14.2 per cent in 2026 to 12.1 per cent by 2028.

On the non-monetary dimensions, poverty fell sharply from 53.8 per cent in 2005–06 to 16.4 per cent in 2019–21.

"This progress was mainly driven by strong consumption growth, rising employment, especially among women, and expanded social transfers, including food subsidies," the Bank said.

According to the multilateral agency, as poverty declined, it became increasingly concentrated among households with lower education, fewer assets, limited access to stable employment and higher dependency ratios.

Spatially, India's poverty reduction story is one of both convergence and concentration. Households in both rural and urban areas experienced substantial welfare gains, with faster progress in rural India significantly narrowing the rural-urban gap.

RURAL-URBAN GAP

Yet, many households that remain poor still live in rural areas, where productivity is lower and access to higher-quality non-farm employment opportunities remains more limited.

Poverty has also become increasingly concentrated geographically. While living standards improved across most States, households in a contiguous belt stretching from Uttar Pradesh to West Bengal account for about 57 per cent of poor population. As a result, further reductions in national poverty will increasingly depend on enabling productive employment in these States, it said.

The Bank also noted that labour market conditions remain broadly resilient, with labour force participation and employment rates stable between Q1 FY2026 and Q1 FY2027. However, youth unemployment rose from 14.6 to 15.9 per cent between the two quarters, particularly among rural young women. Moreover, "real earnings remained broadly unchanged with employment growth concentrated in relatively low-productivity activities," it concluded.

FBI, US Secret Service working with Binance

Reuters
London

Binance is working with law enforcement around the world, including the Federal Bureau of Investigation (FBI) and the United States Secret Service (USSS), after hackers stole a record $6.3 billion from the platform, a person familiar with the situation told *Reuters*.

The FBI said in a statement that it was "aware of the incident and is engaged with relevant public and private partners to understand the scope of the activity, evaluate potential impacts, and coordinate appropriate investigative steps."

T.G.CO-OP OILSEEDS GROWERS' FED. Ltd.,
9th Floor, Parishrama Bhavan, Basheerbagh, Hyderabad - 004.
TEL No: 040-23235501/02 e-mail: info@tgoilfed.in

Notice No. P&P/Crude Palm Oil Refinery 250TPD to 400TPD/NRMT/905/2025-26/664/23-24 Dt: 30.10.2026

E-TENDER NOTICE

TGOILFED, Hyderabad invites E-tenders from Potential and Reputed Manufacturers / Contractors for **Design, Engineering, Supply, Erection and Commissioning of a 250 TPD Expandable to 400 TPD Crude Palm Oil (CPO) & RBD Palm Oil Refining Plant comprising Pretreatment, Bleaching, Deodorization and Dry Fractionation Sections along with all Associated Utilities, Auxiliary Systems and Allied Equipment on a Turnkey** Basis at Oil Palm Complex, **Narmetta,** Siddipet District, Telangana.

Note: 1. Publish of e-tender **31.10.2026 at 5:00PM**, Pre mid meeting **04.11.2026** at **Head Office @ 11.30 AM**, Last Date for uploading e-tender **16.11.2026 at 5:00 PM.**
2. All Details related to EMD & Tender Document will be available in e-Tender Website: **https://tender.telangana.gov.in**
3. Contact Number: Manager (Plants & Projects): **+91-7331184209**

Sd/- MANAGING DIRECTOR - TGOILFED.

MAHANADI COALFIELDS LIMITED
(A Subsidiary of Coal India Limited)
Jagruti Vihar, Burla - 768020, Dist. - Sambalpur, Odisha
Tel. (EPABX) : 0663-2542461 to 469 Website : www.mahanadicoal.in

NOTICE

All the tenders issued by CIL and its Subsidiaries for procurement of Goods, Works and Services are available on website of Coal India Ltd **www.coalindia.in**, respective subsidiary Company, (**MCL,www.mahanadicoal.in**), CIL e-Procurement portal **https://coalindiatenders.nic.in** and Central Public Procurement Portal **https://eprocure.gov.in**. In addition, procurement is also done through GeM portal **https://gem.gov.in**

R-5315

THE TRAVANCORE-COCHIN CHEMICALS LIMITED
(A Government of Keralam Undertaking)
P.B. No.4004, Udyogamandal P.O., Kochi-683 501, Kerala, India
Phone : +91 484 -2546289, 2546515, 2545016.
CIN: U24299KL1951SGC001237, GSTIN : 32AAACT6207B1Z1
Email: purchase@tcckerala.com, Website: www.tcckerala.com

GLOBAL TENDER INTIMATION

Tenders are invited from Technology suppliers/Manufacturers for the **Supply of 244.944 Sq.M (120 Nos) of Membranes for AGC Electrolyser.**

Global Tender Reference No :TCCL/GS/568/2026-2027
Last date of receipt of duly filled up tenders :**23.11.2026 @ 14:00 Hrs I.S.T.**
Tender documents can be downloaded from our website: **https://www.tcckerala.com/tender**
Amendment/Corrigendum if any will be published only in the above website.

Sd/- Asst. General Manager (Materials)

कोल इंडिया लिमिटेड
(एक महारत्न कंपनी)
(भारत सरकार का एक उद्यम)
कंपनी सचिवालय, तीसरी मंजिल, कोर-2, प्रेमिसेस-04-एमएआर
प्लॉट - ए एफ-III, एक्शन एरिया-1ए, न्यू टाउन, राजरहाट
कोलकाता-700156, दूरभाष: 033 - 23246526
ईमेल: cil.taxdoc@coalindia.in
वेबसाइट: www.coalindia.in सीआईएन - L23109WB1973GOI028844

Tax on 2nd Interim Dividend for TY 2026-27

Board of Directors of Coal India Limited at their meeting held on 29th October'2026 has inter-alia declared the payment of **2nd Interim Dividend @ Rs. 10.25/- per equity share** having face value of Rs.10/- each for the TY 2026-27. This communication is in respect of the applicable Tax Deduction at Source ("TDS") provisions as per the Income Tax Act'2025 on the dividend payable by Coal India Limited. Detailed requirements for various categories of shareholders seeking exemption from TDS are uploaded on the website of Coal India Limited under **Investor Center Tab** which may be referred by the shareholders.

The dividend, as declared by the Board, will be paid to shareholders holding equity shares of the Company, either in electronic or in physical form as on **Wednesday, 4th November'2026, i.e, Record Date.**

Shareholders who wish to avail the benefit of nil/lower/beneficial deduction of tax at source are requested to fill up the relevant forms and upload the documents at CIL Tax Portal **https://taxportal.coalindia.in** or mail to **cil.taxdoc@coalindia.in**

The Tax Portal shall remain open from Friday, 30th October'2026 till Friday, 6th November'2026 (cut-off date).

Kindly note that exemptions forms submitted to any other email ids/ other portals/Registrar and Share Transfer Agent or beyond the above-mentioned cut-off date shall not be considered. Further, application of nil/lower/beneficial tax rate shall depend upon the completeness of documents submitted by the shareholders and review to the satisfaction by the company.

SEBI vide its Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) (Fifth Amendment) Regulations, 2025 dated 18th November'2025 inter-alia, has omitted the existing first and second proviso to Regulation 12. Accordingly, it is hereby informed to all the shareholders that CIL will be paying dividend through RBI approved electronic modes only and no physical dividend such as warrant, cheques, demand draft etc. will be dispatched to shareholders. All the shareholders are requested to update their KYC details in their demat account to facilitate online transfer of dividend directly to their bank accounts.

For Coal India Limited
Sd/-
(B.P. Dubey)
Executive Director (CS)

Place: Kolkata
Date: 29.10.2026

KERALA BOOKS AND PUBLICATIONS SOCIETY
(An undertaking of the Government of Kerala)
KAKKANAD P. 0,
KOCHI 682 030. KERALA
Website : www.keralabooks.org
E-mail : books.kbps@gmail.com

No. P1-3451/2024/1254/4070 Date:20.10.2026

E-Tender Notice

e-Tenders are invited through www.etenders.kerala.gov.in for printing of **Self adhesive labels** as an inhouse operation within KBPS.
Further details can be availed from our website www. keralabooks.org Contact over phone 0484-2422343/9995412786

Sd/- **Managing Director**

ELECTRONIC PAYMENT AND SERVICES PRIVATE LIMITED
Registered Office: Unit No 302, A Wing, Supreme Business Park, Hiranandani Gardens, Powai, Mumbai – 400076.
CIN: **U95112MH2011PTC222535**
Website: https://www.electronicpay.in/

ECONOMIC GROUP HOLDINGS LLC
Registered Office: Emirates Financial North Tower, 11th Floor, DIFC, Dubai, United Arab Emirates.
License No: **861835**
Website: https://www.economicgroup.ae/

PUBLIC NOTICE

(In terms of Paragraph 3(i), Annex-1 of RBI circular CO.DPSS.POLC.No.S-590/02-14-006/2022-23 dated July 04, 2022 on 'Requirement for obtaining prior approval in case of takeover / acquisition of control of non-bank PSOs and sale / transfer of payment system activity of non-bank PSO')

This notice is issued jointly by Electronic Payment and Services Private Limited (the "Company") and Economic Group Holdings LLC (the "Acquirer") in terms of Paragraph 3(i), Annex-1 of the Requirement for obtaining prior approval in case of takeover / acquisition of control of non-bank PSOs and sale / transfer of payment system activity of non-bank PSO' having reference No. CO.DPSS.POLC.No.S-590/02-14-006/2022-23, issued by the Reserve Bank of India ("RBI") dated July, 04, 2022 ("PSO Change in Control Circular").

1. Particulars of the Company - The Company is a private limited company incorporated in India on September 29, 2011 with CIN - U95112MH2011PTC222535 and its registered office at Unit No 302, A Wing, Supreme Business Park, Hiranandani Gardens, Powai, Mumbai. 400076. RBI granted the Company a Certificate of Authorization No. 204/2024 dated October 04, 2024 under the Payment and Settlement Systems Act, 2007, to set up, own and operate White Label ATMs (WLAs) in India in accordance with RBI's Guidelines on White Label ATMs dated June 20, 2012, as amended from time to time. The Company operates under the brand name "eps BANCS" for its White Label ATM business in India.

2. Particulars of the Acquirer - The Acquirer is a limited liability company incorporated in Dubai – United Arab Emirates, with License No – 861835 and its registered office at Emirates Financial North Tower, 11th Floor, DIFC, Dubai, United Arab Emirates. The Acquirer is engaged in delivering integrated solutions across the mobility, industrial, and consumer sectors, through a combination of operational execution, technology enablement, and commercial activities. The Acquirer is a foreign owned and controlled company, incorporated in Dubai, United Arab Emirates and is a Single Owner (LLC-SO)

3. Proposed transaction - Under a Share Purchase Agreement dated June 30, 2026, between the Company, the Acquirer and Shareholders of the Company (the "Seller"), the Seller has agreed to sell, and the Acquirer has agreed to buy, 662,107 equity shares representing 82.57% of the current equity share capital of the Company (the "Proposed Transaction").

On consummation of the Proposed Transaction, there will be a change in control, shareholding, ownership. The control of the Seller will pass to the Acquirer, and there will be a change in its shareholding, board composition and management of the Company. The Company will continue to hold its RBI authorization and operate its WLA network under the brand "eps BANCS".

4. Reasons for the Proposed Transaction - The Proposed Transaction provides the Seller, an exit opportunity from the Company. For the Acquirer, it is an entry into India's payments sector with an established, RBI- authorized White Label ATM platform, and an opportunity to expand the scale and capabilities of its business. The Acquirer intends to draw on its experience in mobility, industrial and consumer businesses, and in technology enablement and operational execution, to strengthen and grow the Company's ATM network, particularly in semi-urban and rural areas, and to improve access to cash and related financial services for customers. The Company will continue to operate its White Label ATMs under its existing RBI authorization, and there will be no interruption in services to customers, banks, merchants or other stakeholders.

5. RBI approval/ No Objection - RBI, by its letter No. CO.DPSS.AUTH.No. S803/02-27-004 /2026-27 dated 30th October 2026, has conveyed, it's no objection to the proposed takeover, change in control, shareholding and management of the Company. The Proposed Transaction will be completed after fulfilment of the conditions precedent under the SPA, and not earlier than 15 (fifteen) calendar days from the date of publication of this notice.

6. Clarifications and objections Any person seeking clarification on, or having any objection to, the Proposed Transaction may write within 15 (fifteen) calendar days from the date of this notice to the Nodal Officer, at its registered office address above or at pradnya@electronicpay.in , or to the Acquirer at finance@economicgroup.ae

This notice is also available on the Company's website at https://www.electronicpay.in/

Place: Mumbai **Date: 31st October 2026**

For **Electronic Payment and Services Private Limited**
Sd/-
Mani Mamallan
Chairman and Managing Director

For **Economic Group Holdings LLC**
Sd/-
Rawoof Ali Mohamed Farook
Executive Director

intellect
live your dream

INTELLECT DESIGN ARENA LIMITED
(CIN: L72900TN2011PLC080183)
Registered Office: No.244, Anna Salai, Chennai - 600 006, Tamil Nadu, India.
Corporate Office: Plot No.3/G-3, SIPCOT IT Park, Siruseri, Chennai - 600 130.
Email: shareholder.query@intellectdesign.com, company.secretary@intellectdesign.com
Website: www.intellectdesign.com Phone: 044-6700 8000 Fax : 044-6700 8874

UNAUDITED STANDALONE AND CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND HALF YEAR ENDED SEPTEMBER 30, 2026

Based on the recommendations of the Audit Committee, the Board of Directors of INTELLECT DESIGN ARENA LIMITED ("the Company") at its meeting held on **October 30, 2026** has approved the **Unaudited Standalone and Consolidated Financial Results for the quarter and half year ended September 30, 2026** which have been reviewed by M/s. MSKC & Associates LLP, (Formerly known as MSKC & Associates), Statutory Auditors of the Company, in terms of Regulation 33 of SEBI (Listing Obligations and Disclosures Requirements) Regulations, 2015.

The aforesaid results are also being disseminated on Company's website at **https://www.intellectdesign.com/investor/results/Financials-Q2FY27.pdf** and can also be accessed by scanning the Quick Response code provided.

SCAN ME

Place : Chennai
Date : October 30, 2026

For **Intellect Design Arena Limited**
Sd/-
Arun Jain
Chairman & Managing Director
DIN : 00580919